பராபவ ௵ வைகாசி ௴
மே - ஜூன் 2026

மலர்: 9
இதழ்: 2

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்




MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



திரு அவதார உத்ஸவம்

ஸ்ரீ:

பராபவ ஹு வைகாசி மீ
மே - ஜூன் 2026

மலர்: 9
இதழ்: 2


ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** M.K.S. Mohan Babu & P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

பராபவ வருஷத்தின் இரண்டாவது மாதமான வைகாசி மாதத்தில் வைஷ்ணவ தினசரி என்னும் நூலின் ஆறாம் பாசுரத்தில் இஜ்யா காலம் எனும் மூன்றாவதாக ஸ்ரீவைஷணவர்கள் அனுஷ்டிக்க வேண்டியதை ஸ்வாமி தேசிகன் மேலும் விவரிக்கிறார்.

பாகவதர்கள் திருவாராதநம் செய்யும்போது பேரருளாளனைத் தம் வீட்டிற்கு அருமையாய் வந்த ஒரு பந்துவாக நினைத்து மகிழ்வர்; நாடு முழுதையும் ஆளவல்ல இளவரசனே வந்திருப்பதாய்க் கொண்டு அதற்குத் தக்கவாறு உபசரிப்பர்; நெடுங்காலம் தவங்கிடந்து அருமையாய்ப் பெற்ற புத்ரனைப்போல நினைத்து அன்புகொள்வர்; மதங்கொண்டு அழகியதாய் விளங்கும் ஒரு யானையைக் கண்டாற்போலக் கண்டுகளிப்பர்; பெறுவதற்கரிய உயர்ந்த ஒரு ரத்நத்தைப் பெற்றாற்போலப் பெருமிதங்கொள்வர்; இத்தகைய உணர்ச்சிகளுடன் சாஸ்த்ரீயமான வஸ்துக்களைக் கொண்டு பாகவதர்கள் பேரருளாளனுக்கு ஸகல உபசாரங்களுடனும் ப்ரஸாதம் முதலியவற்றை நிவேதநம் செய்வர். இங்ஙனம் செய்வதே இஜ்யை எனப்படும் என்று அற்புதமாக விவரிக்கின்றார்.

இதனால் பாகவதர்கள் பகவானை அர்ச்சிக்கும் பொழுது தம்முடைய பாவபந்தத்தை எவ்வாறு வெளிக்கொணர வேண்டும் என்பதை ஸ்வாமி நயம்பட எடுத்துரைக்கிறார். இந்த பாசுரத்தில் எம்பெருமானை புத்ரனாக பாவிப்பதை, பெரியாழ்வார் தாலட்டுதல், செங்கீரை ஆடுதல், சப்பாணி கொட்டுதல், தளர்நடை நடத்தல், காக்கையை கோல்கொண்டு வரச்சொல்லுதல், எம்பெருமானுக்கு பூச்சூட்டுதல், காப்பிடுதல் போன்ற பலவற்றைக் கொண்டு தாம் எவ்வாறு எம்பெருமானை பாவித்தருளினாரோ அவ்வாறே நாமும் பாவம் செய்யவேண்டும் என்று ஏற்படுகிறது.

வைகாசி விசாகத்தில் அவதரித்த குருகூர்ச் சடகோபனும் திருவனந்தபுரத்தில் மிக்க ஆசையுடன் உறைகின்ற எம்பெருமானை வேறு எந்த பலனுக்கும் அன்றி அவனை பூஜிப்பதே பலன் என்னும் பாவத்துடன் ஆராதிக்கும் பக்தர்கள் மிகவும் புண்யம் செய்தவர்கள் என்றும் ச்லாகிக்கிறார். மேலும், நாம் செய்யும் க்ரியைகளைக் காட்டிலும் நாம் செய்யும் மனோபாவத்தினாலேயே ப்ரிதீயடைகிறான் என்றும், தாள்கள் தலையில் வணங்கி நாள் கடலைக் கடத்துமவரான பாகவதர்களிடத்தில் பாபவிரோதிகளை நிரஸனம் செய்தருள்வான் என்றும் காரிமாறன் சடகோபன் பலபடிகளாக எடுத்துரைக்கிறார்.

சரணாகதியின் மஹிமையைப் பற்றிய வ்யாஸம், விசேஷக் கட்டுரைகள் மற்றும் தொடர்களுடன், சித்திரை மாதம் நடந்த எம்பெருமானார், மதுரகவி ஆழ்வார் திருநக்ஷத்ரங்கள், அவதார உத்ஸவம் போன்றவற்றின் வண்ணப் படங்களுடன் தேசிக சந்தேசம் உங்கள் கைகளில்.

# Wealth Of Utsavams, Abundance Of Grace

## FROM THE DESK OF TRUSTEES

With the abundant grace of the Divya Dampathis and the blessings of our Acharyas, the Chithirai month at Sri Vedantha Desikar Devasthanam was celebrated with immense devotion, grandeur and active participation from devotees.

The auspicious Vishu Punya Kala Varusha Pirappu was observed with traditional fervour marking the beginning of the Tamil New Year. The sacred 10-day Sri Bhashyakarar Utsavam was conducted in a spiritually elevating manner with Veda and Divya Prabandha chanting. The Vasantha Utsavam, Madhurakavi Azhwar Sathumurai and the holy Chithra Pournami Festival were celebrated with great devotion and enthusiasm. The highlight of the month was the grand Avathara Utsavam of Perumal and Thayar, during which large numbers of devotees participated and received their divine blessings.

As we enter the sacred month of Vaikasi, preparations are underway for the temple's most important annual festival — the Brahmotsavam, to be celebrated for ten days in a grand and traditional manner. Brahmotsavam occupies a unique and exalted place in temple worship. It is believed that Brahma himself performs this utsavam for the Lord, and participation in this sacred festival bestows immense spiritual merit and divine grace upon devotees.

The Brahmotsavam will be followed by the delightful Thotta Utsavam, offering devotees another opportunity to enjoy the divine beauty and blessings of Perumal in a serene and festive setting.

We place on record our heartfelt gratitude to all donors, Ubhayadars, devotees, kainkaryaparars and volunteers whose wholehearted participation and generous support ensured the successful conduct of all the utsavams. Their devotion and service continue to strengthen the activities and traditions of the Devasthanam.



We also wish to inform devotees about a change in the Board of Trustees. **Sri R. Ananthapadmanabhan,** who completed five years of dedicated service as Trustee, demited office after his tenure got over. The Devasthanam places on record its sincere appreciation for his valuable service, commitment and contributions during his tenure.



The Electoral Board has nominated Sri P. Srihari as Trustee in his place. **Natteri P. Srihari (a) Lakshmi Narasimhacharyar** is an eminent Divya Prabandham scholar, teacher, and Editor of the website of SVDD, and also serves on the Editorial Board of Desika Sandesam. A devoted practitioner and mentor, he has trained generations of students in the 4000 Divya Prabandham verses for over 30 years, while also pursuing a distinguished career as a journalist at *The Hindu* — one that culminated in the role of Senior Deputy Editor. We extend our warm welcome and best wishes to Sri Srihari and pray that he may continue to serve the Devasthanam with devotion and dedication.

We convey our heartfelt good wishes to both the outgoing Trustee Sri R. Ananthapadmanabhan and the incoming Trustee Sri Srihari.

May the blessings of Perumal, Thayar and Acharyas be upon all!

ஸ்ரீ:

## பராபவ வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மே / ஜூன் | வைகாசி | | | | | |
| 15.05.2026 | 1 | த்ரயோதசி / சதுர்தசி | வெள்ளி | அச்வினி | கடை வெள்ளி. காலை தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு. ஆஸ்தானம். வைகாசி மாதப்பிறப்பு | ஸ்ரீ K. சேதுராமன் குடும்பத்தினர் |
| 30.05.2026 | 16 | சதுர்தசி | சனி | விசாகம் | நம்மாழ்வார் திருநஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம், ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை பொழுதுடன் ஆராதனம். இரவு புஷ்ப பல்லக்கு வீதிபுறப்பாடு | ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் |
| 31.05.2026 | 17 | பௌர்ணமி | ஞாயிறு | அனுஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ R. பார்த்தஸாரதி |
| 01.06.2026 | 18 | ப்ரதமை | திங்கள் | கேட்டை | தொண்டரடிபொடி ஆழ்வார் | |
| 02.06.2026 | 19 | த்விதீயை | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 03.06.2026 | 20 | த்ருதீயை | புதன் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 04.06.2026 | 21 | சதுர்த்தி | வியாழன் | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 05.06.2026 | 22 | பஞ்சமி | வெள்ளி | ச்ரவணம் | பெருமாள், தாயார் மூலவர் உத்ஸவர், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. பின்புதாயாருடன் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ R. பார்த்தஸாரதி. ச்ரவணம்: ஸ்ரீ T. E. ஸ்ரீநிவாஸன் |
| 06.06.2026 | 23 | ஷஷ்டி | சனி | அவிட்டம் | தோட்ட உத்ஸவம். பெருமாள் ஆழ்வார்பேட்டை ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் எழுந்தருளல் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 07.06.2026 | 24 | ஸப்தமி | ஞாயிறு | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 08.06.2026 | 25 | அஷ்டமி | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 09.06.2026 | 26 | நவமி | செவ்வாய் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 10.06.2026 | 27 | தசமி | புதன் | ரேவதி | திருமால்வடை | |
| 11.06.2026 | 28 | ஏகாதசி | வியாழன் | அச்வினி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | |
| 12.06.2026 | 29 | த்வாதசி | வெள்ளி | பரணி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 13.06.2026 | 30 | த்ரயோதசி / சதுர்தசி | சனி | க்ருத்திகை | கலியன் | |
| 14.06.2026 | 31 | சதுர்தசி | ஞாயிறு | ரோஹிணி | கண்ணன் ஆஸ்தானம் | |

குறிப்பு: மே 18 (திங்கள்) முதல் 27 (புதன்) வரை ப்ரஹ்மோத்ஸவம் பத்ரிகை 18,19 பக்கங்களில்

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# வைணவ வழக்குச் சொற்கள் 21

**மங்களாசாஸனம் ஆன தலம்:** பாடல் பெற்ற தலம், ஆழ்வார்களால் அவர்கள் பாசுரங்களில் துதிக்கப்பட்ட திருத்தலம், 108 திவ்ய தேசங்களுள் ஒன்று

**மட்டாக:** கொஞ்சமாக

**மதுபர்க்கம்:** (பஞ்சாமிர்தம்) தேன், நெய், வெல்லம், பழம், திராட்சை இவை சேர்த்துச் செய்யும் உண் பொருள்

**மந்திரித்தல்:** ஆராய்ந்து முடிவு செய்தல்

**மறு:** ஸ்ரீவத்ஸம்

**மஞ்சனம்:** நீராட்டம்

**மந்திரக் கோடி:** நிச்சயதார்த்தப் புடவை

**மரவை:** மரத்தாலான சிறு கலம் (பாத்திரம்)

**மாதுகரம்:** ஸன்யாஸி அல்லது பெரியவர் ஆகாரம் எடுத்துக்கொள்ளல், பிக்ஷை ஏற்றல்

**மாணி:** குள்ளன்

**மாதுலர்:** அம்மான், மாமா

**மினுக்கம்:** மேன்மை, சிறப்பு; Wellbeing, material prosperity

**முறி:** துண்டு

**முற்றோதல்:** பாராயணம்

**முதலி:** பெரியோர்

**முக்கோல் பகவர்:** த்ரிதண்டி ஸன்யாஸி

**முமுக்ஷு:** மோக்ஷத்தை விழைபவன்; One who is serious about Moksha

**முகப்பு:** முன்னால், முன்பு, ஸந்நிதி

**மூர்த்தி:** உருவம், வழிபடு விக்ரஹம் அல்லது சிலை

**மூதலித்தல்:** நிறுவுதல்; To establish a point, to substantiate

**மேலெழுத்திடுதல்:** ஒப்புக் கொள்ளல், அங்கீகரித்தல்

**மேலாப்பு:** விதானம்; மேற்கட்டு; Canopy

**மேலையகத்தார்:** அண்டை வீட்டார், ஒரு வம்சம்

**யோகம்:** உறங்க முற்படுமுன் எம்பெருமான் திருவடிகளைத் தம் தலை மேற்கொண்டிருப்பதாய் த்யானம் செய்தவாறே படுத்தல்

**யோகநித்ரை:** அறிதுயில் (எல்லாம் அறிந்து உறங்குதல்)

**ரஹஸ்ய த்ரயம்:** திருமந்த்ரம் (அஷ்டாக்ஷரம்), த்வயம், சரம ச்லோகம் என்ற மூன்றும்; (1) ஓம் நமோ நாராயணாய; (2) ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே – ஸ்ரீமதே நாராயணாய நம:; (3) ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச ॥

**ரஹஸ்யம்:** நுண்பொருள்

**லயம்:** ஒடுக்கம், ஸ்ருஷ்டி அழிந்து மறைதல்

**லீலா விபூதி:** ஸ்ருஷ்டி, முக்குணங்களுடன் கூடிய படைப்புலகப் பொருட்கள், காட்சிப்படும் உலகம்

**லௌகிகம்:** உலகியல் வழக்கு

**வ்யாமோஹம்:** மதிமயக்கம், அன்பு

**வ்யாக்யானம்:** உரை; Commentary

**வம்பு:** புதுமை; Wonder

**வட்டம்:** 30 நாழிகை

**வட்டில்:** ஆராதனத்தில் பயன்படுத்தப்படும் வட்டமும் குழிவுமான சிறு கலம்

**வடபெருங்கோவிலுடையான்:** வில்லிப்புத்தூர் வடபத்ரசாயிப் பெருமாள்

**வரிசை:** பரிசு, சீர், மரியாதை; Gift

**வகுளம்:** மகிழம்பூ

**வடிவழகு:** ஸௌந்தர்யம்

**வங்கம்:** கப்பல்

**வதுவை:** திருமணம்

**வள்ளி:** கொடி

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

(தொடரும்...)

## வைகாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்**
(10 நாட்கள்)
மே 18 (திங்கள்) முதல் 27 (புதன்) வரை
**தங்க கருட வாஹனம்:** மே 20 (புதன்)
**யானை வாஹனம்:** மே 23 (சனி)
**திருத்தேர்:** மே 24 (ஞாயிறு)
**தீர்த்தவாரி:** மே 26 (செவ்வாய்)

**விடாயாற்றி உத்ஸவம்**
(3 நாட்கள்)
மே 28 (வியாழன்) முதல் 30 (சனி) வரை
**புஷ்ப பல்லக்கு:** மே 30

**நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்**
மே 30 (சனி)

**ச்ரவணம்**
ஜூன் 5 (வெள்ளி)

**தோட்ட உத்ஸவம்**
ஜூன் 6 (சனி)

ஸ்ரீ:

# வானேறப் போமளவும் வாழ்வு

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் M.S. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ

காஞ்சி மாநகருக்கு அருகில் திருத்தண்கா என்னும் க்ஷேத்ரத்தில், அநந்தஸூரிகள், தோதாரம்மை என்ற பெயர் கொண்ட தம்பதிகள் வாழ்ந்து வந்தனர்.

கி. பி. 1268க்குச் சரியான விபவ ஞூ புரட்டாசி மீ திருவோண நன்னாளில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அன்று திருவேங்கடமுடையானது திருவிழாவின் தீர்த்த தினமானதால், குழந்தைக்குத் திருவேங்கடமுடையான் என்று பெயர் சூட்டப் பட்டது.

இவர்க்கு முறையாக எல்லா ஸம்ஸ்காரங்களும் நடத்தப்பட்டன. தக்க வயதில் இவருடைய தாய் மாமனான கிடாம்பி அப்புள்ளார் என்று பிரஸித்தமான ஆத்ரேய ராமாநுஜர், தம் ஆசார்யரான நடாதூர் அம்மாளின் உத்தரவினால் கல்வி கற்பித்து வரலானார்.

வேதமெனப்படும் வடமொழி மறைகளையும், அருளிச்செயல்கள் எனப்படும் தென்மொழி மறைகளையும் இவர் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார். இருபதாம் பிராயத்திலேயே கல்வி கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஸ்ரீரங்கத்தில் மார்கழி மாதத்தில் திருவரங்கர் மறை ஓதுவிழா கண்டருள்வர். அப்பொழுது இரு மொழி மறைகளையும் மணிமண்டபங்களில் தங்கி இருந்து கேட்டு உகப்பர். தமிழ் மொழியில் உள்ள அருளிச்செயலைக் கோயில் வழிபாட்டின் பொழுது ஓதுவது சாஸ்த்ர விரோதம் என்று சொல்லிச் சிலர் அதைத்தடுக்க முற்பட்டனர்.

அவருடன் வாதிட்டு, திருமங்கை மன்னனும் ஸ்ரீமந்நாத முனிகளும் திருவரங்கர் மனம் மகிழ ஏற்படுத்திய தமிழ்மறை ஓதுதலை நிலை நாட்டித் தரும்படி அழைக்கப் பெற்ற இவர், ஸ்ரீரங்கம் சென்று வாதிகளை வென்று, முன்போல் பெருமாளைத் தமிழ் மறையின் இன்னிசையைக் கேட்டருளும்படி செய்தார்.

அதனால் மகிழ்ச்சியுற்ற பெருமாள் இவர்க்கு, **உபய வேதாந்த ஆசிரியர்** என்ற விருதினை வழங்கினார். ஸ்ரீரங்க நாச்சியாரும் **ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்** என்ற பட்டத்தை நல்கினார்.

இவருக்கு பகவத் ராமானுஜரிடமும், அவருடைய நூல்களி லும் அளவிறந்த ஈடுபாடு இருந்தது. பகவத்



ராமாநுஜருடைய நூல்களைப் பரப்புவதைத் தம் வாழ்வின் லக்ஷ்யமாகக் கொண்டு, தாமே அதற்கேற்ப நூல்களை இயற்றுவதோடு, ஸ்ரீஸுதர்சந ஸூரிகள் இயற்றிய ச்ருதப்ரகாசிகா என்பது போன்ற நூல்களைக் காப்பாற்றி ப்ரசாரம் செய்வதையும் தமது கடமையாகக் கொண்டார்.

தம்மைச்சார்ந்தசிஷ்யர்களின்தகுதிஉடைமைக்கேற்பப் பல நூல்களையும் இயற்றியுள்ளனர். வடமொழியிலும், தமிழிலும் இந்த இரண்டும் அழகாகக் கலந்து மணிப்ரவாளம் எனப் பெயர் பெற்ற மொழியிலும், ஸம்ஸ்க்ருதத்தின் இன்னொரு வடிவமென்னும் ப்ராக்ருதம் என்கிற மொழியிலும், பல நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமன் வனத்தில் எழுந் தருளியிருந்தபோது கோசல தேசத்தை நன்கு ஆண்டு வந்த அவர்தம் ஸ்ரீபாதுகைகள் விஷயமாக ஆயிரம் ச்லோகங்கள் கொண்ட ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தையும் ஒரே இரவில் ஒரு யாமத்தில் எழுதினார். இதனால் பெரியோர்கள் இவரைக் **கவிதார்க்க ஸிம்ஹம்** என்று போற்றி உகந்தனர்.

'திருமாலே உலகைப் படைத் துக் காத்து அழித்தும், முக்தியளித்தும் வரும் ப்ரப்ரஹ்மம். அவருடைய உத்தரவுகள் தான் வேதமும் மன்வாதி ஸ்ம்ருதிகளும். இந்த உத்தரவை மீறுவதால் ஜீவராசிகள் ஸம்ஸாரத்தில் உழலுகிறார்கள். பகவான் கருணையுடன் இவர்களைத் திருத்தவே புண்ய நதிகளையும் க்ஷேத்ரங்களையும் தோற்றுவித்ததுடன் ஸீதையைத் தேட வானர வீரர்களை உலகெங்கும் அனுப்பியது போல், முக்தியை விரும்புகிறவர்களை உருவாக்கி நல்வழிப்படுத்த அடியவர்களை உலகெங்கும் அனுப்புகிறார்.

'அறியாமலேயே ஜீவராசிகளுக்கு இவர்களுடன் ஏற்படும் தொடர்பினால் ஆஸ்திக்யம் தோன்றி, ஸத்வகுணமும் வளர்கிறது. இது படிப்படியாக வளர்ந்து ஆசார்யனை அடைவிக்கிறது. அவருடைய கடைக்கண் பார்வையால், தத்வ ஜ்ஞாநத்தை ஏற்படாமல் தடுத்துவரும் பாவங்கள் தொலைகின்றன.

'பின்னர் பரதத்வத்தையும், அதற்குத்தான் அடிமையாக இருப்பதையும், அதற்குத் தொண்டு செய்வதே தனக்குப் பயனானமையும், அதைக் கிட்ட அந்தப் பரம்பொருளின் கருணை தவிர வேறு வழியில்லாமையால் அதன் திருவடிகளில் பொறுப்பை ஒப்புவிதலே முக்தி ஸாதனமென்பதையும் தெளிவுபடுத்துகிற அந்த ஆசார்யரின் அறிவுரை, இத்தகைய சில பாக்யவான்களுக்கே கிடைக்கிறது.

'அநாதிகாலமாகத்தான்செய்த குற்றங்களால் பகவானை அணுக அஞ்சி, தாயான பெரிய பிராட்டி யாரைத் தஞ்சம் புகுகிறான். அவள் பகவானைப்



பிழை பொறுத்தருளும்படி செய்யவே, பகவானை அணுகி அந்த திவ்ய தம்பதிகள் இருவருடைய திருவடிகளிலும் தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பையும் தன்னையும் ஒப்புவிக்கிறான். இப்படி தன்னை ரக்ஷிப்பதால் வரும் உகப்பும் அவர்களுக்கே என்றும் எண்ணிக் கொள்ளுகிறான்.

'உடனே பகவானும் லக்ஷ்மியும் இவன் மோக்ஷமடையட்டும் என்று அருளுடன் நினைக்கவே, நினைத்த காலத்தில் இவன் அர்ச்சிராதி மார்கமாகப் பரமபதம் சென்று, அந்த தம்பதிளுக்கு எல்லா தேச த்திலும் எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் உள்ள எல்லாவிதமான தொண்டுகளையும் செய்யும்படி, அனைத்துலகும் உடைய அந்த திவ்ய தம்பதிகளை தினைத்தனையும் விடாதே அநுபவித்தல் எனும் ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்' என்பதே வேதங்களும் புராணங்களும் பூர்வர்களும் கூறி வரும் கொள்கை. இந்தக் கொள்கையை ஸ்தாபித்துப் பரப்புவதற்குத்தான் ஸ்ரீதேசிகன் அவதாரம் செய்ததும்.

**சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்**
**பாரொன்றச் சொன்ன பழமொழியுள் – ஓரொன்று**
**தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு**
**வானேறப் போமளவும் வாழ்வு.**

ஸ்ரீ:

# இராமானுச முனிவேழம்

ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு

'உயர்வற உயர் நலமுடைய' ஸ்ரீமந்நாராயனனின் கருணையால், 'மயர்வற மதிநலம்' பெற்றவர்கள் ஆழ்வார்கள். பகவானிடம் உள்ள எண்ணற்ற கல்யாணகுணங்களில் ஆழங்காற்பட்டு, அவனைப் போற்றி, அவன் திருவடிகளை அடைந்து உய்வதற்கு உபாயமான சரணாகதி மார்கத்தை, தாங்கள் இனிய தமிழில் அருளிய ஸ்ரீ ஸூக்தியான, நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தின் மூலம் பரக்கக் கூறியுள்ளனர். இப்பாசுரங்களில், பொதிந்துள்ள உள் அர்த்தங்களை நம் பூர்வாசார்யர்கள், பாமரருக்கும் புரியும் வண்ணம் அழகாக விளக்கம் அருளியுள்ளனர். 'உறங்கும் பெருமானே உலவும் பெருமானாக' என்னலாம் படி ஆசார்யர்களாக அவதரித்தனர்! அவர்களில் மிகவும் போற்றப் படுபவர் ஸ்ரீ ராமானுஜர்

அவர் அவதரித்து, 1009-ம் ஆண்டு கொண்டாடும் இச் சமயத்தில், ராமானுஜரைப் பற்றி, நாம் கற்று, அறிந்து கொண்ட விஷயங்களில் சிலவற்றை இவ்விடத்தில் நினைவுகூர்ந்து பகிர்ந்து கொள்வோம்!

ராமானுஜர் 74 ஸிம்ஹாஸனாதிபதிகளை, நம் விசிஷ்டாத்வைத தர்சனத்திற்காக நியமித்தார். அதைப் போல அவரைப் பற்றிய 74 குறிப்புக்களை இக்கட்டுரையில் காண்போம்.



1) ராமானுஜர் அவதரித்த இடம் ஸ்ரீ பெரும்புதூர்.

2) பெற்றோர்கள்: தந்தை - ஸ்ரீ ஆஸூரி கேசவ தீக்ஷிதர், தாயார் - பூமிப் பிராட்டி.

3) 1017-ம் ஆண்டு, பிங்கள வருடம், சித்திரை மாதம், திருவாதிரை நக்ஷத்ரம் கூடிய வெள்ளிக்கிழமையில் ராமானுஜர் அவதாரம்.

4) **அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம் ।**
**பலபத்ர: த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி ॥**

ஆதிரூபம் ஆதிசேஷன். பிறகு லக்ஷ்மணனாக அவதரித்தார். மூன்றாவதாக பலராமனுடைய அவதாரம். கலியில் ராமானுஜராக அவதரிக்கப் போகிறார் என்று நம் ஸம்ப்ரதாயப் பெரியோர்கள் கூறியுள்ளனர்.

5) மாதுலரான பெரிய நம்பிகள், குழந்தையைக் கடாக்ஷித்து, **ஸர்வ லக்ஷண ஸம்பந்ந: லக்ஷ்மணோ லக்ஷ்மி வர்தந:** என்கிற படி, ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுத் தேர்ந்து ப்ரகாசிப்பான் என்பதால், அதற்கு ஏற்றபடி, 'இளையாழ்வார்' என்று திருநாமம் சாற்றி அருளினார்.

6) இளம் ப்ராயத்தில், யாதவப் ப்ரகாசர் என்ற அத்வைதியிடம் கல்வி பயின்றார்.

7) யாதவப் ப்ரகாசரின் கோட்பாடுகள், வைணவ ஸம்ப்ரதாயத்திற்குப் புறம்பானதால், அவரை விட்டு விலகி, மற்ற ஆசார்யர்களிடம் வேத வேதாந்தங்களைக் கற்றார்.

8) ப்ரஹ்மத்தின் உண்மைப் பொருளை, உபநிஷத் வாக்யங்களைக் கொண்டு, சரியானபடி அர்த்தம் சொன்ன பெருமையை உடையவர்.

9) இதர மதத்தவர்களை வாதத்தில் வென்று, விசிஷ்டாத்வைத ஸிந்தாந்தத்தை நிலை நாட்டினார்.

10) காஞ்சி வரதனுக்கு சாலைக் கிணறு எடுத்து, தீர்த்த கைங்கர்யம் செய்தார்.

11) ஆளவந்தாரின் திவ்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரமானார் உடையவர்.

12) 'ஆம் முதல்வன் இவன்' – 'நம் தர்சன நிர்வாகத்திற்கு இவனே ஏற்றவன்' என்று, ஆளவந்தார் ஆசீர்வதித்தார் உடையவரை.

13) ஆளவந்தாரின் தர்சனம் நேரிடையாகக் கிடைக்கப் பெறாத ராமானுஜர், மனம் வருந்தி, அவர் சரம திருமேனியில் மூன்று விரல்கள் மடங்கி இருப்பதை கண்டு, காரணம் அறிந்து, அதைத் தன் செயலால் பூர்த்தி செய்தார்.

14) அவை: 1. திருவாய்மொழிக்கு வியாக்யானம் எழுதுவது (திருக்குருகைப் பிள்ளானைக் கொண்டு முடித்தார்).

15) 2. ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விளக்கம் வரைவது (ஸ்ரீ கூரத்தாழ்வானின் உதவியுடன் 'பாஷ்யம்' அருளினார்).

16) 3. ஸ்ரீ வ்யாஸர், ஸ்ரீ பராசரரின் திருநாமங்களைத் தக்கவர்க்கு இடுவது. (ஸ்ரீ கூரத்தாழ்வானின் இரு புதல்வர்களுக்கும் அத் திருநாமங்களைச் சூட்டி, ஆளவந்தாரின் மூன்று அபிலாஷைகளையும் பூர்த்தி செய்தார் உடையவர்).

17) ஓராண் வழியாக உபதேசிக்கப்பட்டு வந்த ஸித்தாந்த விஷயங்களை 'வரம்பு வைத்தால் வைணவம் வளராது' என்பதால், ஆசையுடை யோருக்கெல்லாம் உபதேசிக்கலாம் என்று அன்றே வரம்பை அறுத்தார் நம் உடையவர்.

18) அத்வைதியான யாதவ ப்ரகாசரைத் தன் சிஷ்யனாக ஏற்ற பெருந்தன்மை உடையவர்.

19) மாயாவாதியான யஜ்ஞமூர்த்தியை வாதப்போரில் வென்று, தன்னச் சரணடைந்த அவரை, வைஷ்ணவனாக்கிய பெருமையையும், அவருக்கு, 'அருளாளப் பெருமான் எம்பெரு மானார்' என்ற திருநாமம் சூட்டி மகிழ்ந்த பெருமையையும் உடையவர்.

20) உறங்காவில்லிதாசர் என்பவரை, திரு அரங்கனின் அழகிய கண்களில் உள்ள கருணையைக் காட்டி, அவரைத் திருத்திப் பணிகொண்டு, பகவத், பாகவத கைங்கர்யங்களில் ஈடுபட வைத்தார்.

21) முக்கோலான, ஞான, வைராக்ய, பக்தியை உடையவர்.

22) ஒரு பங்குனி உத்திரத்தன்று பெரிய பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு, ஸ்ரீரங்கத்தில், அரங்கனிடம் சரணாகதி செய்த பாக்யத்தை உடையவர்.

23) தன் த்னியுடன் உண்டான கருத்து வேறு பாட்டினால் ஸந்யாஸம் மேற்கொள்ள நினைத்து, பேரருளாளனிடம் விண்ணப்பித்தார் உடையவர்.

24) 'திரிதண்ட காஷாயாதிகளை நீர் இவ்வுலகில் வாழ்கின்றவரையில் தரித்துக் கொள்வீராக!' என்று பேரருளாளன் நியமனம் செய்தார்.

25) காஞ்சியில், திருக்கச்சி நம்பிகள் மூலமாக 6 வார்த்தைகள் பெற்றார் உடையவர். அவை:

1. ஜீவாத்மாகளிடமிருந்து வேறுபட்டவன் பரமாத்மா.
2. திருமாலே முழுமுதற் கடவுள்.
3. பரமாத்மாவை அடையும் முக்தி நெறி சரணாகதி.
4. மரண காலத்தில் பகவானை நினைக்க வேண்டும் (அந்திம ஸ்ம்ருதி) என்பது கட்டாயம் இல்லை.
5. சரீர முடிவில் ஜீவர்களுக்கு முக்தி.
6. பெரிய நம்பிகளை ஆசார்யராகப் பற்ற வேண்டும்.

26) பெரியம்பிகள் ராமானுஜருக்கு, மதுராந்தகத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து வைத்தார்.

27) உடையவரின் 5 ஆசார்யர்களும் அவர்களின் மூலம் கற்ற நூல்களும்:

- பெரிய திருமலை நம்பி - ஸ்ரீமத் ராமாயணம்.
- திருக்கோட்டியூர் நம்பி – ரஹஸ்யங்கள்.
- திருவரங்கப் பெருமாள் அரையர் – திருவாய்மொழி. மற்றும் அருளிச்செயல்கள், ஸ்தோத்ரங்கள்.
- பெரிய நம்பிகள் - த்வய மந்த்ரம்.
- திருமாலை ஆண்டான் – திருவாய்மொழி.

28) கச்சியை விட்டு வந்த பின் அரங்கனை, தன்னையே மறந்து தன்னை ரக்ஷிக்கும்படி வேண்டி நிற்க, ராமானுஜரின் முடி மீது அரங்கன் தன் மலர்த்திருவடிகளைச் சாற்றி, 'இளையாழ்வீர்! பொங்கோதம் சூழ்ந்த இந்த புவனியும், விண்ணுலகம் ஆகிய உபய விபூதி செல்வங்களை உமக்கும் உம்மைச் சார்ந்தவர்க்கும் தந்தோம்! இனி நம் கோயிலைத் திருத்தி பணி கொள்ளவேண்டும்' என்று நியமனம் செய்தான். அந்நாள் முதல் ராமானுஜருக்கு 'உடையவர்' என்ற திருநாமம் வழங்கலாயிற்று.

29) உடையவரைத் தவிர வேறு தெய்வம் அறியாத வடுக நம்பி, அவருக்குப் பால் காய்ச்சும் பணியை மேற்கொண்டார்.



30) உடையவரின் பாத நிழலாக இருந்தவர் எம்பார்.

31) சரமோபாய நிஷ்டையை, உடையவருக்கு அருளியவர் திருவரங்கப் பெருமாள் அரையர்.

32) எம்பெருமானாருடைய தண்டம், பவித்ரங்களாகப் போற்றப்படுபவர்கள் கூரத்தாழ்வானும் முதலியாண்டானும்.

33) உடையவர் அருளிய நூல்கள் ஒன்பது.

34) அவை: ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதாந்த ஸங்கரஹம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம் மற்றும் நித்யம்.

35) 'நித்யம்' என்ற க்ரந்தத்தில் எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்யும் முறைகளை விளக்கியுள்ளார் உடையவர்.

36) இவர் அருளிய நூல்கள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் அமைந்தவை.

37) உடையவரைப் பற்றின, பிரஸித்தமான தமிழ் ப்ரபந்தம் அமுதனார் அருளிய 'இராமானுச நூற்றந்தாதி'.

38) ராமானுஜரின் ஸித்தாந்தத்திற்கு 'எம்பெருமனார் தர்சனம்' என்று பெயரிட்டார் நம்பெருமாள்.

39) ராமானுஜரை 'கோயிலண்ணரே' என்று அழைத்தார் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள்.

40) தமிழ் வேதமாகிய திருவாய் மொழியை 'ஈன்ற முதல் தாய்' சடகோபன் என்றால், 'மொய்ம்பால் வளர்த்த இதத்தாய்' ராமானுஜன்.

41) விஷ்ணுசித்தரை 'எங்களாழ்வான்' என்று முதன் முதலில் திருநாமம் இட்டு அழைத்தவர் உடையவர்.

42) அனந்தாழ்வான் மூலம் திருமலையில் நந்தவன கைங்கர்யம் ஏற்படுத்தினார். இன்றளவும் ஸ்ரீ ராமானுஜரின் நியமனப் படி, பெருமாளுக்கு புஷ்ப கைங்கர்யம் நடந்து வருகிறது.

43) திருமலையில் எழுந்தருளியிருப்பது ஸ்ரீமந் நாராயணனே என்று உடையவர் நிரூபித்திக் காட்டியதால், சைவ, வைஷ்ணவ சர்ச்சை முடிவுக்கு வந்தது.

44) காஞ்சியிலிருந்து, ராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்துவர, திருவரங்கப் பெருமாள் அரையரை ஸ்ரீ ரங்கநாதன் அனுப்பினான்.

45) திருநாராயணபுரம் ஸம்பத்குமாரப் பெருமாளை தில்லியிலிருந்து மீட்டு வந்தார் உடையவர்.

46) எம்பெருமனார் வெள்ளைச் சாத்தி எழுந் தருளியிருக்கும் இடம் திருநாராயாணபுரம்.

47) திருமலை நம்பியின் குமாரருக்கு 'திருக்குருகைப் பிரான் பிள்ளான்' என்று திருநாமம் சற்றினார் உடையவர்.

48) யாத்ரையாக திருக்கோளூர் செல்லும் வழிலில், ஒரு பெண் பிள்ளை அவ்வூரைவிட்டுக் கிளம்பு வதைப் பார்த்த ராமானுஜர், 'அடியேனுக்குப் புகும் ஊர்; உனக்குப் புறப்படும் ஓர் ஆயிற்றோ' என்று வினவ, அந்த ஞானப் பெண் 81 வாக்யங்களைக் காரணமாகச் சொல்லக் கேட்ட ராமானுஜர் திகைப்புற்றார். இப்பெண் சொன்ன வாக்யங்களின் தொகுப்பே, 'திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம்' என்று தனி நூலாக வெளியிடப்பட்டது.

49) திருக்கோட்டியூர் நம்பியிடம் ரஹஸ்யார்த் தங்களைக் கற்க ராமானுஜர் 18 முறை ஸ்ரீரங்கத்திலிருந்து சென்றார்.

50) ராமானுஜர் கீழ்க்காணும் 6 கட்டளைகள் இட்டருளினார்.

51) ஸ்ரீ பாஷ்யம் வாசிப்பது, கேட்பது, மற்றவருக்கு சொல்வது.

52) திவ்ய ப்ரபந்தங்களின் பொருளை உணர்ந்து வாசிப்பது, பிறருக்கு வாசித்துக் காட்டுவது.

53) உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு, திருமாலைகளை உண்டாக்குதல்.

54) திருநாராயணபுரத்தில் ஒரு குடிசையாவது கட்டிக் கொண்டு வாழ்வது.

55) த்வயத்தை அர்த்தத்துடன் அனுஸந்தானம் செய்வது.

56) ஒருபாகவதன் 'இவன்நல்லவன்' என்றுகூறும்படி, அவன் அபிமானத்தில் ஒதுங்கியிருப்பது.

57) திருப்பாவையில் அதிக ஈடுபாடு கொண்டிருந் தார் உடையவர். அதனாலேயே பெரிய நம்பிகள் இவரை 'திருப்பாவை ஜீயர்' என்று அழைக்கலானார்.

58) இவ்விருள் தருமா ஞாலத்தில் ஞான விளக்கேற்றி, கலியும் கெடும் என்பதற்கு ஏற்ப, மற்ற சமயவாதிகளை எதிர்த்து, விசிஷ்டாத் வைத பரமான கோட்பாடுகளைப் பரப்பி, எளிய முறையான சரணாகதி உபாயத்தை உலகோருக்குக் காட்டினார் உடையவர்.

59) உடையவரின் 3 திருமேனிகள்: 1. தமர் உகந்த



திருமேனி - திருநாராயணபுரத்தில். பக்தர்கள் உருவாக்கின திருமேனி.

60) 2. தாம் உகந்த திருமேனி - முதலியாண்டானின் குமாரர் கந்தாடையாண்டான் உருவாக்கிய அர்ச்சா மூர்த்தி, ஸ்ரீபெரும்புதூர்.

61) 3. தானான திருமேனி - ஸ்ரீரங்கத்தில் திருவரங்கன் விரும்பியபடி கோயிலில் ப்ரதிஷ்டை செய்த, உடையவரின் திவ்யமங்களத் திருமேனி.

62) தோள் கொடுத்து நம்மைத் தூக்கி, தூயவனிடம் சேர்க்கும் வழியைக் காட்டினார் எம்பெருமானார்.

63) 1000 ஆண்டுக்ளுக்கு முன்பே அவதரித்திருந் தாலும், இன்றளவும் உலகெங்கும் அவரைப் போற்றி உத்ஸவங்கள் நடத்தி ஆச்ரிதர்கள் அவர் புகழைக் கொண்டாடுகின்றனர்.

64) எம்பெருமானாரின் அடியொற்றி வந்த ஸ்ரீ வேதாந்த தேசிகன், தான் அருளிச்செய்த 'யதிராஜ ஸப்ததி' என்னும் 74 ச்லோகங்கள் அடங்கின க்ரந்தத்தில், ராமானுஜரிடம் தனக்கு உண்டான ஈடுபாட்டையும் பக்தியையும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

65) எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யம் முதலிய நவநிதிகளில் நிறைந்த ரஸத்தைப் பருகியே அடியேனின் வயதெல்லாம் கழிந்து விடடது. எம்பெருமானார் தன்னைக் கருணைக் கண் கொண்டு கடாக்ஷிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

66) 'தேத்தாங் கொட்டையால் சேற்று நீர் தெளிவு பெறுவது போல, அசுத்தமான பதங்களால்

அழுக்கு நிறைந்த என் வாக்கு, யதிராஜர் புகழ் பாடுவதால் தூய்மையாயிற்று' என்கிறார் ஸ்ரீ தேசிகன்.

67) 'எதிர்வாதம் செய்யும் வலிமை மிக்க, மதயானைக் கூட்டம் போன்றவர்களுக்கு, யதிராஜரின் பெயரே அவர்களை அடக்கும் அங்குசமாக இருக்கும்' என்கிறார் தூப்புல் பிள்ளை.

68) 'புறச்சமயத்தவர்களின் குதர்க்க வாதம் ஒடுங்கியதற்குக் காரணம் எம்பெருமானாரின் அவதாரமே' என்றும் அறுதியிடுகிறார்.

69) 'எம்பெருமானாரைத் தஞ்சம் அடைவதில் அடியேன் கர்வம் கொள்கிறேன்' என்கிறார் ஸ்ரீ தேசிகன்.

70) ஸ்ரீ கூரத்தாழ்வானின் சிஷ்யரான திருவரங்கத்தமுதனார், எம்பெருமானாரிடம் கொண்ட பக்தியினாலும் ஈடுபாட்டினாலும், அவரின் குணநலங்களைப் போற்றி 'இராமானுச நூற்றந்தாதி' என்ற 108 பாசுரங்கள் கொண்ட ப்ரபந்தத்தை அருளியுள்ளார். இது 'ப்ரபன்ன காயத்ரி' என்று போற்றப் படுகிறது.

71) இதன் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும், 'இராமானுச' என்று விளிக்கும்படியாக அமைதிருப்பது விசேஷ அம்சம்.

72) ஆழ்வார்கள் பெருமானைப் போற்றிப் பாடிய பாசுரங்களுடன் இராமானுசரைப் பற்றிய இந்த 108 பாசுரங்களும் சேர்ந்து 4000 திவ்ய ப்ரபந்தமாக மிளிர்வது சிறப்பு. எம்பெருமானாருக்கு அமுதனார் ஒரு மகுடம் சூட்டினாற் போலாயிற்று.

73) ராமானுஜருக்கு முற்பட்ட ஆசார்யர்கள் இவரது திருமுடி ஸம்பந்தத்தாலும், பிற்பட்ட ஆசார்யர்கள் ராமானுஜரின் திருவடி ஸம்பந்தத்தாலும் பெருமை பெற்றனர். ஓர் ஆபரணத்தின் நடுவே மாணிக்கக் கல் இருந்து அந்த ஆபரணத்தை மேலும் கீழும் ஒளியுடையதாகச் செய்வதைப் போல, உடையவரும் குருபரம்பரையின் நடுவில் மாணிக்கமாகத் திகழ்கிறார்.

74) ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்தை நிலை நாட்டி வளர்த்த ராமானுஜர், ஒரு சிம்மமாக, வேழமாக, கொள்கை பரப்பும் கோமானாக வாழ்ந்து காட்டிய வள்ளல். 120 ஆண்டுகள் இம்மண்ணுலகில் வாழ்ந்து, வைணவத்தை வளர்க்கத் தொண்டு புரிந்தவர். தான் அவதரித்த ஆண்டான பிங்கள வருடத்தில் சித்திரைத் திங்கள் திருவாதிரையன்றே திருமாமணி மண்டபத்தை அலங்கரித்தார்.

நாமும் அவர் நாமம் சொல்லிச்சொல்லி, அவர் ஸம்பந்தத்தால் ஸ்ரீமந்நாராயணனின் திருவடியை அடைவோமாக. உய்ய ஒரே வழி உடையவர் திருவடிகளே!

சீர்பெரும்புதூர் மாமுனியின் திருவடிகள் வாழியே!


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**

9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**







## பல்லவ உத்ஸவம்









## வருஷப்பிறப்பு உத்ஸவம்









## ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம்








ஸ்ரீ:







ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்







அமாவாசை - வெள்ளிக்கிழமை புறப்பாடு







ஸ்ரீ:



ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன்பவளவாய் காண்பேனே. பெருமாள் திருமொழி – 4–9

ஸ்ரீய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் அர்ச்சாரூபியாய் அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய ஸ்ரீ பேயாழ்வார் அவதார ஸ்தலமும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகன் அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீ திருவேங்கடமுடையான் நாளது **பராபவ வருஷம் வைகாசி 4ம் தேதி (18.05.2026) திங்கட்கிழமை முதல் ப்ரஹ்மோத்ஸவம்** ஆரம்பித்து நடத்திக்கொள்வதாக ஸங்கல்பித்துக்கொண்டிருப்பதால், மேற்படி மஹோத்ஸவத்தில் ஆஸ்தீக அன்பர்கள் பெருந்திரளாக அன்வயித்தும், கைங்கர்யபரர்களாயிருந்தும் திருமயிலை ஸ்ரீ திருவேங்கடமுடையானுடைய க்ருபைக்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| *15.05.2026* | வெள்ளிக்கிழமை | மாலை | கடை வெள்ளி |
| *18.05.2026* | திங்கட்கிழமை | காலை | த்வஜாரோஹணம் |
| *20.05.2026* | புதன்கிழமை | காலை | தங்க கருட வாஹனம் |
| *24.05.2026* | ஞாயிற்றுக்கிழமை | காலை | திருத்தேர் |
| *26.05.2026* | செவ்வாய்கிழமை | காலை | தீர்த்தவாரி |

R. அனந்தபத்மநாபன், R. முகுந்தன், L.N. ஸ்ரீனிவாசன்
தர்மகர்த்தாக்கள்

| நாள் | நேரம் | உத்ஸவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 16.05.26 (சனி) | இரவு 8 மணி | **செல்வர் உத்ஸவம்**<br>உபயம்: D.N.S Family |
| 17.05.26 (ஞாயிறு) | இரவு 7 மணி முதல் | **அங்குரார்ப்பணம் - ம்ருத்ஸங்க்ரஹணம் (சேனைநாதன் புறப்பாடு)**<br>உபயம்: ஸ்ரீ. N. சேஷாத்ரி<br>**அதிவாஸம் - த்வஜபடம் புறப்பாடு - த்வஜபட கருட ப்ரதிஷ்டை**<br>உபயம்: அழிசூர் ஸ்ரீ. நாராயணன் |
| 18.05.26 (திங்கள்) | காலை<br>காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **த்வஜாரோஹணம்** (*காலை 4.30 - 5.30 மணி - மேஷ லக்னம்*)<br>உபயம்: ஸ்ரீ. S. ஸ்ரீவத்ஸா<br>**பவழக்கால் சப்பரம்** உபயம்: ஸ்ரீ. ரகுபதி & ராம்<br>**ஸிம்ஹ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. K. வேணுகோபாலன் |
| 19.05.26 (செவ்வாய்) | காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **ஹம்ஸ வாஹனம்** உபயம்: எலக்டோரல் போர்டு<br>திருமஞ்ஜனம் உபயம்: ஸ்ரீ. N.S. வரதாச்சாரியார் குடும்பத்தினர்<br>**ஸூர்யப்ரபை** உபயம்: 1. ஸ்ரீ. N. கஸ்தூரிரங்கன், 2. ஸ்ரீ. N. ரங்காச்சாரியார், 3. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |
| 20.05.26 (புதன்) | காலை 6.00 மணி<br>இரவு 8 மணி | **தங்க கருட வாஹனம்**<br>உபயம்: ஸ்ரீ. S. வரததேசிகன் குடும்பத்தினர்<br>**ஹனுமந்த வாஹனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ. R.வாசுதேவன் 2.ஸ்ரீ. C.கோதண்டம் 3. ஸ்ரீமதி சீதா ரங்கநாதன் |

| நாள் | நேரம் | உத்ஸவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 21.05.26 (வியாழன்) | காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **சேஷ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M.D. சுதர்சனம் ஐயங்கார் ட்ரஸ்ட்<br>**சந்திர ப்ரபை** உபயம்: M/s. சுந்தரம் சாரிடீஸ் |
| 22.05.26 (வெள்ளி) | காலை 5.00 மணி<br>இரவு 8 மணி | **நாச்சியார் திருக்கோலம்** உபயம்: ஸ்ரீ. R. முகுந்தன்<br>**யாளி வாஹனம்** உபயம்: 1. ஸ்ரீ. P. ஸ்ரீனிவாசன் 2. ஸ்ரீ. மாதவன் சம்பத் |
| 23.05.26 (சனி) | காலை 6.30 மணி<br>இரவு 8 மணி | **வேணுகோபாலன் திருக்கோலம் (சூர்ணாபிஷேகம்)**<br>உபயம்: ஸ்ரீ. V.C. முரளிதரன் குடும்பத்தினர்<br>**யானை வாஹனம் - (ஏசல்)** உபயம்: ஸ்ரீ. ராகவாச்சாரியார் குடும்பத்தினர் |
| 24.05.26 (ஞாயிறு) | காலை<br>இரவு 8 மணி | **திருத்தேர்** *காலை 4.15 - 5.15 மணி மேஷ லக்னம்*<br>காலை 7.00 மணிக்கு புறப்பாடு<br>உபயம்: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)<br>**தங்கக்கேடயம் (தோட்ட உத்ஸவம்)** உபயம்: ஸ்ரீ. K.ரங்கநாதன் குடும்பத்தினர் |
| 25.05.26 (திங்கள்) | மதியம் 1 மணி<br>இரவு 8 மணி | **திருப்பாய்ந்தாடு திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>2. திருக்கண்ணமங்கை ஸ்ரீ. S. சுந்தரராஜன் ஐயங்கார் பண்டு<br>**குதிரை வாஹனம்** உபயம்: 1. ஒலக்கூர் ஸ்ரீ. ராஜகோபாலன் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி நிர்மலா J. ஸ்ரீநிவாஸன் 3. ஸ்ரீ. K. ராமன் குடும்பத்தினர் |
| 26.05.26 (செவ்வாய்) | காலை 6.30 மணி<br>மதியம் 12 மணி<br>இரவு 8 மணி | **ஆள்மேல் பல்லக்கு (மட்டையடி மஹோத்ஸவம்)**<br>**தீர்த்தவாரி** உபயம்: 1. ஸ்ரீ. S.R. ஜெகந்நாதன் 2. ஸ்ரீ. T.P. பத்மநாபன்<br>**ஆனந்த நிலைய விமானம்**<br>உபயம்: ஸ்ரீ. T. நாராயணன் & ஸ்ரீ. S. நாராயணன் குடும்பத்தினர் |
| 27.05.26 (புதன்) | காலை 9 மணி<br>மதியம் 1 மணி<br>இரவு 8 மணி<br>இரவு 10 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: TCN Trust<br>**த்வாதச ஆராதனம்** உபயம்: ஸ்ரீ. R. கோபாலசாமி ஐயங்கார் பண்டு<br>**வெட்டிவேர் சப்பரம்** உபயம்: வனபோஜனம் ட்ரஸ்ட்<br>**த்வஜ அவரோஹணம்** |
| (பிரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், காலை 11 மணிக்கு ததியாராதனை, மாலை 6:30 மணிக்கு பத்தி உலாத்தல், மாலை 7 மணிக்கு ததியாராதனை நடைபெறும்) | | |

| விடையாற்றி உத்ஸவம் | | |
|---|---|---|
| 28.05.26 (வியாழன்) | மாலை 4.30 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1.ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் பண்டு (ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்)<br>2.ஸ்ரீ. A.G. ஸ்ரீனிவாசன் |
| 29.05.26 (வெள்ளி) | மாலை 4.30 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: ஸ்ரீ. கௌசிகன் |
| 30.05.26 (சனி) | காலை 9.30 மணி<br>இரவு 7.30 மணி | **திருமஞ்ஜனம்**<br>**புஷ்ப பல்லக்கு** உபயம்: ஸ்ரீ. S. சுந்தரம் குடும்பத்தினர் |

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH / CHEQUE / NEFT (Sri Vedantha Desikar Devasthanam - S.B. A/c. No. 108301000003154 - Indian Overseas Bank - East Mada Street, Mylapore - IFSC : IOBA0001083)

2. In order to ensure frequent and speedier communication, please furnish your email ID, phone number. Please ignore if you have already sent.

3. Please also note that all your future correspondence will also be sent through email or SMS.






## அக்ஷய த்ருதீயை புறப்பாடு














ஸ்ரீ:

கண்ணுக்கினியன



அக்ஷய த்ருதீயை புறப்பாடு











அக்ஷய த்ருதீயை புறப்பாடு










## அக்ஷய த்ருதீயை புறப்பாடு







கண்ணுக்கினியன

ஸ்ரீ:



மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ④

## அதிகாரம் - 3 - சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்ச:

## பாலகாண்டத்தில் சரணாகதி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ப்ரஹ்மன் உள்பட தேவ-மநுஷ்ய-திர்யக்-ஸ்தாவராதி ஜீவகோடிகள் அனைவரையும் ரக்ஷிப்பவனும், ப்ரபஞ்சத்திற்கு மூலகாரணமாய் உள்ளவனும் பரமாத்மா ஸ்ரீமந்நாராயணனே என்பதை ச்ருதி வாக்யங்களைக் கொண்டு வால்மீகி பகவான் தன் காவ்யத்தில் கொண்டாடுவதை ஸ்வாமி தேசிகன் கீழ் அதிகாரத்தில் காட்டியருளி எம்பெருமானே பரதத்வம் என்பதை ஸ்தாபித்தார்.

இப்படிப்பட்ட பெருமைகளை உடைய எம்பெருமானை அடைய உபாயங்கள் இரண்டு – பக்தி மற்றும் ப்ரபத்தி. இதில் ஸர்வருக்கும் அதிகாரமுள்ள சரணாகதியை ஸ்ரீமத்ராமாயணத்தில் பலர் அநுஷ்டித்துக் காட்டிய வ்ருத்தாந்தங்களின் மூலம் விளக்கி, அதன் மேன்மையை இவ்வதிகாரத்தில் ஆசார்யன் நிர்தாரணம் பண்ணுகிறார்.

**யமே வைஷ வ்ருணுதே தேந லப்ய:** - 'எவனை பரமாத்மா தானே வரித்துக் கொள்கிறானோ (ஏற்றுக் கொள்கிறானோ), அவனாலேயே அந்த பரமாத்மா அடையப்படுகிறான்' என்று உபநிஷத் உத்கோஷிக்கிறது. இவ்வசனத்தின் மூலம் ஜீவனின் சொந்த முயற்சியால் அல்லாமல் எம்பெருமானின் அநுக்ரஹம் மூலமாகவே ஜீவன் அவனை அடைய முடியும் என்பது திண்ணம்.

பெருமாளுக்கு நம்மை அநுக்ரஹிக்க வேண்டும் என்கிற திருவுள்ளம் எவ்வாறு ஏற்படும்? துணைமலர்க் கண்களாயிரத்தானின் பார்வையை நம் பக்கல் திரும்பச்செய்வது எப்படி?

**தஸ்ய வசீகரணம் தத் சரணாகதி:** - பக்தியோகத்திற்கு ஸர்வாதிகாரத்வம் (எல்லோராலும் அநுஷ்டிக்கக் கூடியது) இல்லை. ஆனால் சரணாகதி **அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் நொந்தவர்** என எவர்களுக்கெல்லாம் ச்ரிய:பதியை அடையவேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறதோ அவர்கள் அனைவருக்கும் அவனிடத்தில் ப்ரபத்தி பண்ணுவதற்கு அதிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக, ஜீவர்கள் செய்யும் பக்தி மற்றும் ப்ரபத்தி ஆகிய உபாயங்கள் இரண்டுமே நேரிடையான மோக்ஷ ஸாதநம் அன்று. ஸர்வரக்ஷகனுக்கு நம்மிடத்தில் ஒரு வசீகரணம் ஏற்பட்டு நமக்கு அநுக்ரஹம் பண்ண




வேண்டும் என்கிற எண்ணத்தை ஏற்படுத்துவதே மட்டுமே என்பதும் தெளிவாகிறது.

ஸ்வாமி தேசிகன், மூலத்தில் **ஸர்வ-சரண்யமான பர-தத்வத்தினுடைய வசீகரன-சமர்த்தமாய் ஸர்வாதிகாரமாய் பரம-ஹிதமாயிருக்கிற சரணாகதி தர்மம்** என்று ப்ரபத்தி மார்கத்தைக் கொண்டாடுகிறார்.

இப்படி வேதத்தில் ப்ரஹ்ம சப்தத்தினால் சொல்லப்படுவது ஸ்ரீமந்நாராயணனே. அவனே பரதத்வம், ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தித்வன், ஸர்வசரண்யன். அவனே ஸித்தோபாயம்; அவனை வசீகரித்து நம்மிடத்தில் அநுக்ரஹம் பண்ணவைப்பது நாம் பண்ணக்கூடிய சரணாகதி.

வேதத்தில் ஸ்பஷ்டமாக விதிக்கப்பட்ட சரணாகதி தர்மத்திற்கு உபப்ருஹ்மணமாய் நிற்பது ப்ரபத்தி சாஸ்த்ரமாகிய ஸ்ரீமத்ராமாயண க்ரந்தம். அதில் ப்ரபத்தி எப்படி அநுஷ்டிக்கப்பட்டது என்பதனை ஸ்வாமி தேசிகன் திருவாக்கினைக் கொண்டு அநுபவிப்போம்.



*ஆவார் ஆர் துணை என்று அலை நீர்க் கடலுள் அழுந்தும்*
*நாவாய் போல் பிறவிக் கடலுள் நின்று நான் துளங்க*
*தேவார் கோலத்தொடும் திருச் சக்கரம் சங்கினொடும்*
*ஆவா! என்றருள் செய்து அடியேனொடும் ஆனானே.*
(திருவாய்மொழி 5-1-9)

நாவாய் என்று கப்பலுக்கு இன்னொரு பெயர். 'அலையெறிகின்ற கடலினுள்ளே அமிழ்ந்துகிற ஒற்றைப் படகில், காப்பவர்கள் ஒருவரும் இல்லையே என்று கதறித் தத்தளித்துக் கொண்டிருப்பவன் போல அடியோங்கள் பல பல ஊழிகளாய் கொடூரமான இந்த ஸம்ஸாரக் கடலினுள்ளே அழுந்திக் கிடந்து அதிலிருந்து நிவ்ருத்தி தெரியாமல் நிற்கிறோம். எம்பெருமான் திவ்யமான வடிவோடும் திருவாழி திருச்சங்குகளோடும் கூடி நம்மை ரக்ஷித்து க்ருபை பண்ணி கரையேற்றுகிறார்' என்று ஆழ்வார் அத்புதமாய் அருளிச்செய்கிறார்.

ஹவிர்பாகத்தைப் பெற யாகத்திற்கு எழுந்தருளிய தேவர்கள் அனைவரும் இதே நிலையில் கலங்கி நின்றார்கள். மிகக்கொடியவனான ராவணன் பண்ணக் கூடிய விவரிக்கமுடியாத ஹிம்ஸைகளிலிருந்து நம்மை ரக்ஷிப்பவர் யாரென்று வழிதெரியாமல் நின்றார்கள். அக்கொடிய ராக்ஷஸனுக்கு வரங்களை அள்ளிக்கொடுத்த சதுர்முக ப்ரஹ்மனிடத்தில் முறையிட்டு ஒரு பயனுமில்லை; வேறொரு தேவதையும் தங்களை ரக்ஷிக்கக்கடவர்கள் அல்லர். தங்களை காப்பவர் யாரென்று தெரியாமல் தேவர்கள் தத்தளிக்கும் ஸமயத்தில் ஸர்வலோக சரண்யன் அந்த யாகத்திற்கு எழுந்தருள்கிறார். அதுவும் எப்படி? தனக்கே அஸாதாரணமாகவுடைய அடையாளங்களான பஞ்சாயுதங்களுடனும், பீதகவாடையைத் தரித்தும் எழுந்தருள்கிறார்.

எம்பெருமானின் இந்த ரூபத்தை பார்த்த மாத்ரத்தில் தேவர்கள் அனைவரும் விழுந்து ஸேவிக்கிறார்கள். அது எப்படிப்பட்ட ரூபம்?

**ரூபமேவாஸ்யைதந் மஹிமாநம் வ்யாசஷ்டே** – 'இவருடைய இந்த ரூபமே இவர் மஹிமையை வெளிப்படுத்துவதாக உள்ளது' என்று பொருள். அதாவது, பெருமாளின் திவ்யமங்கள விக்ரஹமே அவரது பேராற்றலையும், எல்லாரைக் காட்டிலும் உயர்ந்த நிலையையும் மற்றும் ஸர்வ சேஷித்வத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என்று ச்ருதிவாக்யம் நிர்தாரணம் பண்ணுகிறது.

யாகத்தில் ஹவிர்பாகத்தைப் பெறுவதற்கு எழுந்தருளின எம்பெருமான் பஞ்சாயுதங்களுடன் எதற்கு எழுந்தருளவேண்டும் என்னில், தானே ஸர்வரக்ஷகன் என்று காட்டுவதற்காகவும், எல்லாக்

ஸ்ரீராமாவதார ஆரம்பத்திலே புத்ர ஸம்பத்தை உத்தேசித்து தசரத சக்ரவர்த்தி சரயூ நதிக்கரையில் புத்ரகாமேஷ்டி யாகத்தை அநுஷ்டித்தார். அந்த யாகத்தின் ஹவிர்பாகத்தைப் பெற்றுக்கொள்ள எல்லாத் தேவர்களும் நேரிடையாகவே எழுந்தருளினர். தேவாதிதேவனான ஸ்ரீமந்நாராயணனும் அங்கே எழுந்தருளினார்.

*ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு: உபயாதோ மஹாத்யுதி: ।*
*சங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி: ॥*
(பா.கா - 15.16)

'இந்த ஸமயத்தில் ஸர்வஜகத்திற்கும் ஈச்வரனான ஸ்ரீமஹாவிஷ்ணு (சிலரை ரக்ஷிக்கும்படியான காலம் வாய்த்த ஸந்தோஷத்தினால், தம் திருமேனி எங்கும்) மிக்க ஒளிபெற்று, சங்கு, சக்ரம் கதை முதலியவற்றை ஏந்தி, பீதாம்பரதாரியாய் அங்கு எழுந்தருளினார்' என்று ஆதிகவி அருளிச்செய்கிறார்.

மூலத்தில் ஸ்வாமி தேசிகன் ஆழ்வார் பாசுரம் கொண்டு இச்லோகத்தை ஸமந்வயம் பண்ணுவது நன்கு சுவைக்கத்தக்கது.

காலங்களிலும் தான் ரக்ஷணம் பண்ணவேண்டும் என்கிற முனைப்புடன் இருப்பதைக் காட்டவே அவர் தன்னுடைய ஸ்வரூபத்தை வெளிப்படுத்தியும், தம்முடைய ரக்ஷணா-உபகரணகளுடனும் தோன்றினார் - என்று ஸ்வாமி தேசிகன் அத்யத்புதமாய் அருளிச்செய்கிறார்.

இப்படி ஆயுதங்களுடன் எழுந்தருளின பெருமாளிடத்தில் தேவர்கள் எல்லோரும் ப்ரார்த்தனை பண்ணுகிறார்கள்.

*ஸித்த கந்தர்வ யக்ஷாச்ச ததஸ்த்வாம் சரணம் கதா: ।*
*த்வம் கதி: பரமா தேவ ஸர்வேஷாம் ந: பரந்தப ॥*
(பா.கா - 15.25)

ஸித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் எல்லோரும் உம்மையே சரண் அடைகிறோம். ஆச்ரிதர்களின் எதிரிகளைத் வதம் பண்ணுபவரே! மஹாவிஷ்ணுவே! தேவரீரே உத்க்ருஷ்டமானவர், எங்கள் அனைவருக்கும் புகலிடம். தசரத சக்ரவர்த்திக்கு குமாரனாக அவதரித்து ராவணனை வதம் செய்து எங்களை ரக்ஷிக்க ஸங்கல்பிக்க வேண்டுமென்று சரண்யனிடத்தில் தேவர்கள் அனைவரும் இருக்கும் ப்ரகாரத்திலே சரணாகதியை அநுஷ்டித்தார்கள்.

இப்படி தேவர்கள் ச்ரிய:பதியான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பண்ணிய சரணாகதியை ஸ்வாமி தேசிகன் இங்கே காட்டி சரணாகதி தர்மத்தின் மேன்மையை ஸ்தாபிக்கிறார்.

பாலகாண்டத்தில் மேலும் இரண்டு சரணாகதி வ்ருத்தாந்தங்களை நம் தூப்புல் வள்ளல் இங்கே காட்டியருள்கிறார்.


## New Matrimonial Column

We are also happy to inform our readers that, based on requests from several parents in our community, Desika Sandesam will soon introduce a special Matrimonial Column in the magazine as a **free service** to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms, and this new feature is proposed to be introduced soon. Parents who wish to participate may kindly furnish the details at the temple office in advance so that they can be included in the upcoming issue.

**- Trustees**




**த்ரிசங்கு சரணாகதி**

இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய மன்னன் த்ரிசங்கு, தனது பூதவுடலுடன் ஸ்வர்கத்திற்குச் செல்ல விரும்பினான். இதற்காக தனது குலகுருவான வஸிஷ்டரை அணுகினான். விபரீதமான இந்த வரத்தை அவர் மறுக்க, த்ரிசங்கு அவர் புத்ரர்களை ப்ரார்த்தித்தான். அவர்கள் மறுத்தது மட்டுமின்றி, வஸிஷ்டரை மீறியதற்கு கோபமடைந்து, த்ரிசங்குவை சண்டாளனாகும் படி சபித்தனர். இதனால் த்ரிசங்கு விகாரமான ரூபம் பெற்றான். இப்படி வஸிஷ்டரால் கைவிடப்பட்ட நிலையில், தனது நிலை கண்டு வருந்திய த்ரிசங்கு, விச்வாமித்ரரை சரணடைந்து, 'ஸ்வாமி, உங்களை விட்டால் அடியேனுக்கு வேறு கதி இல்லை' என்று ப்ரார்த்தித்தான். விச்வாமித்ரர், த்ரிசங்குவின் பக்தியாலும், சரணாகதனை ரக்ஷிக்க வேண்டிய தர்மத்தாலும் உந்தப்பட்டு, அவனுக்காக ஒரு யாகம் செய்து, அவனை பூதவுடலோடு ஸ்வர்கத்திற்கு அனுப்பினார். அப்போது இந்த்ரன் த்ரிசங்குவை ஸ்வர்கத்தில் அனுமதிக்காமல் கீழே தள்ள, விச்வாமித்ரர் தனது தபோ பலத்தால் ஒரு நூதன ஸ்வர்கத்தை ச்ருஷ்டி செய்து த்ரிசங்குவை அதில் நிலைநிறுத்தினார். இவ்வாறு, தன்னிடம் சரணாகதி செய்தவரை ரக்ஷிப்பதற்காகவும், சரணாகதி தர்மத்தை உலகத்தாருக்கு நிலைநாட்டவும் இப்படிச் செய்தார்.



சுனச்சேபர் சரணாகதி

இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த மன்னன் அம்பரீஷன் அச்வமேத யாகத்தை அநுஷ்டித்தான். யாகத்தின் அங்கமாக, அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குதிரையை ஸ்வதந்த்ரமாக நாட்டின் எல்லைகளைத் தாண்டி சுற்றி வரும்படி விட்டான். ஆனால் அந்தக் குதிரை காணாமல் போயிற்று. அது திரும்பி வந்தால் தான் யாகம் பூர்த்தியாகும்; அச்வமேத யாகம் பூர்த்தியாகாமல் போனால் அதை அநுஷ்டிக்கும் ராஜாவுக்கும் லோகத்திற்க்கும் மிகப்பெரிய அநர்த்தம் ஏற்படும் என்று சாஸ்த்ரம் நிர்ணயிக்கிறது.

எவ்வளவு தேடியும் குதிரை கிடைக்கவில்லை. குதிரைக்கு பதிலாக, பரிஹாரமாக, ஒரு ப்ராஹ்மண குழந்தையை பலியாக அர்ப்பணித்து யாகத்தை பூர்த்தி செய்யலாம் என்று சில பண்டிதர்கள் அறிவுறுத்த, எவரேனும் தங்கள் குழந்தையை விலைக்குக் கொடுக்கிறார்களா என்று ராஜா தேடிச்சென்றான். அப்பொழுது மூன்று பிள்ளைகளை உடைய ரிஷீகர் என்பவரை சந்தித்தான். அவருடைய மூன்று மகன்களில் ஒருவரை விலைக்குக் கொடுக்கும்படி ராஜா ப்ரார்த்தித்தான். ரிஷீகர், தன் ஜ்யேஷ்ட குமாரனின் மீது உள்ள அதிக ப்ரீதியால் அவனைத் தர மறுத்தார். அவரது துணைவியும் கனிஷ்ட குமாரனின் மீது உள்ள ப்ரீதியால் அவனையும் தர மறுத்தாள்.

இதைக் கேட்ட நடுப்பிள்ளையான சுனச்சேபர் இவர்கள் இருவரும் தன்னைத்தான் விலைக்குக் கொடுக்கப்போகிறார்கள் என்று தீர்மானித்து, ராஜா அம்பரீஷனைத் தொடர்ந்து சென்றான்; ராஜாவும் அவனை அழைத்துச் சென்றான். வழியில் புஷ்கர க்ஷேத்திரத்தில் அவர்கள் ஓய்வெடுத்தனர். அப்பொழுது அங்கே விச்வாமித்ரர் தபஸ் செய்து கொண்டிருந்தார். இவர் சுனச்சேபரின் மாதுலர். தன்னுடைய ஸ்திதியை அவரிடத்தில் தெரிவித்து தன்னை ரக்ஷிக்குமாறு சுனச்சேபர் விச்வாமித்ரரிடத்தில் சரணாகதி பண்ணினான். அவனுடைய அவஸ்தையைக் கண்டு உருகிய விச்வாமித்ரர் அவனுக்கு மந்த்ரோபதேசம் செய்தருளினார். அந்த மந்த்ரத்தின் மூலம் அவனுக்கு ரக்ஷணமும், யாகத்தின் பூர்த்தியும், லோகக்ஷேமமும் ஏற்படும் என்று அருளிச்செய்தார். இவ்வாறு, அசாதாரணமான நிலையில் இருந்த சுனச்சேபர், விச்வாமித்ரரின் சரணாகதி தர்மானுஷ்டானத்தின் மூலம் ரக்ஷிக்கப்பட்டார்.

இப்படி மேலும் இரண்டு வ்ருத்தாந்தங்களைக் கொண்டு ஸ்வாமி தேசிகன் சரணாகத-ரக்ஷண தர்மமானது ஸ்ரீமத்ராமாயணத்தின் பாலகாண்டத்தில் எவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டது என்பதை அருளிச் செய்கிறார்

**தொடரும்...**


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

# அஷ்டாக்ஷரமும் ந்ருஸிம்ஹாவதாரமும்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை. அவன் திருவடியல்லால் வேறொரு திருவடிதனில் பணிதல் வ்யர்த்தம் என்பதை அறுதியிட்டு நம் பூர்வர்கள் (ஆச்ரிதர் உய்ய) அநுக்ரஹித்த க்ரந்தங்கள் பலப்பல. உயர்வற உயர்நலம் உடையவனான நாராயணனால் மயர்வற மதிநலம் பெற்ற பீஷ்மர் குருக்ஷேத்ரத்தில் எம்பெருமானது ஆயிரம் திருநாமங்களை ஸேவித்தருளினார் என்றால் நம்மாழ்வாரோ தனது ஆயிரம் பாசுரங்களின் மூலம் எம்பெருமானது ஆயிரம் திருக்கல்யாண குணங்களைக் காண்பித்தருளினார். பங்குனி உத்திரத் திருநாளில் பிராட்டியை முன்னிட்டு பெரிய பெருமாள் திருவடிகளில் சரணாகதி செய்யுங்கால் அவனது திருக்கல்யாண குணங்களை ஸேவித்துகந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் (சரணாகதி கத்யம்).

மேலையார் வழியில் நம் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் இருபத்தியேழாவது அதிகாரமான மூலமந்த்ராதிகாரத்தில், திருமந்த்ரத்துள் (அஷ்டாக்ஷர மந்த்ரம்) பொதிந்துள்ள ஸ்ரீமந்நாராயணனின் 108 குணவிசேஷங்களைக் காண்பிக்கிறார். நம் ஸ்வாமி ஸாதித்த குண விசேஷங்கள் பரிமளிக்கும் ந்ருஸிம்ஹாவதாரத்தில் அந்வயித்து ஆநந்திப்போம்.

**1. நாநாப்ரகாரத்வம் - கேட்பாரைப் பொறுத்து பலனை அநுக்ரஹிப்பவன்**

**2. ஸர்வ பலப்ரதத்வம் - ஆச்ரித அபேக்ஷிதங்களை அருள்பவன்**

பரதேவதையான ஸ்ரீமந்நாராயணன் ரக்ஷிப்பான் என்று தன் மீது மஹாவிச்வாஸம் கொண்டிருந்த ப்ரஹ்லாதன், தனது தகப்பனை மன்னித்தருளுமாறு ப்ரார்த்திக்க, ஹிரண்யனுக்கு ஸ்வர்கத்தினை அநுக்ரஹித்ததுடன் (தன் த்ருப்திக்காக) பொன், பொருள், ராஜ்யம், பதவி என்று அனைத்தையும் அவனுக்கு அருளினான் எம்பெருமான்

அரியுருவாய் இரணியனது ஆகம் கீண்டு வென்று **அவனை விண்ணுலகில் செல** உய்த்தாற்கு (பெரிய திருமொழி 6-6-5)

**3. ஸ்வார்த்த ரக்ஷகத்வம் - தன் ப்ரயோஜனத்திற்காக ரக்ஷிப்பவன்**

ஆச்ரித ஸம்ரக்ஷத்தினையே ஆஹாரமாகக் கொண்ட எம்பெருமான் ஸ்வயம் ப்ரயோஜனத்திற்காக ப்ரபஞ்சத்தினை ஸ்ருஷ்டித்து லீலாரசத்தினை



அநுபவிப்பவன். தன் பக்தனுக்கு இன்னல் விளைவித்த ஹிரண்யனை வதைத்து ப்ரஹ்லாதனை ரக்ஷித்ததற்காக உவகையுற்றான்.

சிங்கமதாய் அவுணன் திறலாகம் முன் **கீண்டுகந்த** (பெரிய திருமொழி 7-6-1)

புக்க அரியுரு வாயவுணனுடல் **கீண்டுகந்த** (திருவாய்மொழி 7-6-11)

கிளரொளியால் குறைவில்லா அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து கிளரொளிய இரணியன தகல்மார்பம் **கிழிந்துகந்த** (திருவாய்மொழி 4-8-7)

திரண்ட தோள் இரணியன் சினங்கொள் ஆகம் ஒன்றையும் இரண்டு கூறு **செய்துகந்த** சிங்கம் (திருச்சந்தவிருத்தம் - 62)

**4. அநதிக்ரமணீய ரக்ஷண ஸம்ரம்பத்வம் - ரக்ஷண வேகம்**

**5. ஸித்தோபாயத்வம் - எப்போதும் ஸித்தோபாயமாக (ஸித்தமாக) இருப்பவன்**

க்ஷீராப்தியில் யோக நித்ரையில் இருந்த ஸ்ரீமந்நாராயணன், எங்குளன் உன் மாயாவி என்ற ஹிரண்யனின் குரல் கேட்டவுடன் அங்கிருந்து மாயமானான். அவனது திருவடிகளை வருடிக் கொண்டிருந்த பிராட்டி முதல் அவனது படுக்கையாக இருந்த ஆதிசேஷன் வரை அனைவரும் அவனைக் காணாது துணுக்குற்றனர். அந்த க்ஷண நேரத்தில், தன் பக்தனின் வாக்கு பொய்க்காமலிருக்க பூலோகத்தில் சித், அசித் என்று அனைத்தினுள்ளும் புகுந்து நின்றானாம் அந்தப் பரமன். ந்ருஸிம்ஹனாக எம்பெருமான் அவதரித்த பின்னரே (அவசர கோலமாக உண்டானதனால்) அவதார காலங்களில் அவனுடனே இருக்கும் ஸுதர்சனாழ்வான் அவசர அவசரமாக வந்து அவனது நகங்களாகக் கிளர்ந்தெழுந்தான்.

**முந்திச் சென்று அரியுருவாய்** இரணியனை முரணழித்த முதல்வர் (பெரிய திருமொழி 7-4-5)

**6. அகாலநியமாவதாரத்வம் - எக்காலத்திலும் அவதரிக்கும் தன்மையுடையவன்**

**7. ஸ்வத: கர்த்ருத்வம் - ஸ்வாபாவிகமாகவே ஸ்வதந்த்ர கர்த்தா**

ஹிரண்யன் தனது அரசவையில் தானே பார்த்துப் பார்த்துக் கட்டிய தூணினுள்ளும் கூட இருக்கும்படியான அகடிதகடநா ஸாமர்த்யம் கொண்ட ஸ்ரீமந்நாராயணன், எல்லாக் காலங்களிலும் அனைத்தையும் ஸங்கல்பமாத்ரத்தில் செய்பவன்.

**தூணாய் அதனூடு அரியாய்** வந்து தோன்றி பேணா அவுணன் உடலம் பிளந்திட்டாய் (பெரிய திருமொழி 1-10-5)

**8. அவஸர ப்ரதீக்ஷத்வம் - ஆச்ரித ஸுக்ருதத்திற்காகக் காத்திருப்பவன்**

ப்ரஹலாதனின் மீது கொடிய ஸர்ப்பங்கள் ஏவி விடப்பட்ட போதும், உயர்ந்த சிகரத்தின் மீதிருந்து அவன் தள்ளி விடப்பட்ட போதிலும், கஜத்தினைக் கொண்டு அவனை மிதிக்கச் செய்த வேளையிலும் நேரில் வாராத எம்பெருமான், ப்ரஹ்லாதனது ஸுக்ருதம் பலனளித்த காலத்தே அவனுக்குப் பிடித்த ரூபத்தினைக் கொண்டு அவனெதிரில் வந்தான்.

நாடி நான் தருவென் என்ற நல் அறிவாளன், நாளும்

தேடி நான்முகனும் காணாச் **சேயவன் சிரித்தலோடும்,**

**ஆடினான்; அழுதான்; பாடி அரற்றினான்; சிரத்தில் செங்கை**

**சூடினான்; தொழுதான்; ஓடி, உலகு எலாம் துகைத்தான் துள்ளி.**

(கம்ப ராமாயணம் - இரணியன் வதைப் படலம் - 128)

**9. ஸமாப்யதிக ராஹித்யம் - ஒத்தார் மிக்கார் இல்லாதவன்**

தானே அனைவரிலும் உயர்ந்தவன். தன்னை விட பலசாலி எவருமில்லை என்ற அகந்தையினால் அனைவரையும் வாதித்த ஹிரண்யனை அநாயாஸமாக வெற்றி கொண்டான் ஸ்ரீமந்நாராயணன்.

**திரிபுரம் மூன்று எரித்தானும் மற்றை மலர் மிசை மேல் அயனும் வியப்ப முரி திரை மாகடல் போல் முழங்கி மூவுலகும் முறையால் வணங்க** எரியன கேசர வாள் எயிற்றோடு இரணியன் ஆகம் இரண்டு கூறா அரி உருவாம் (பெரிய திருமொழி 2-8-1)

**10. ப்ரேரகத்வம் - ப்ரீதி உடையவன்**

**11. அநந்யப்ரேர்யத்வம் - ப்ரீதிக்குக் கட்டுப்படுபவன்**

பக்தியோக நிஷ்டன் மற்றும் ப்ரபந்நன் மீது அலாதியான ப்ரீதி கொண்டவனான எம்பெருமான் அவர்களது ப்ரீதிக்குக் கட்டுப்படுகிறான். அழகனாக ஸேவை ஸாதிக்கிறான்.

இவையா பிலவாய் திறந்தெய் கான்ற இவையா எரி வட்டக் கண்கள் இவையா எரி பொங்கிக் காட்டும் இமையோர் பெருமான் **அரி பொங்கிக் காட்டும் அழகு** (நான்முகன் திருவந்தாதி - 21)

**12. வசீகார்யத்வம் - சரணாகதியால் வசீகரிக்கப்படுபவன்**

அநந்யகதியென்று தன்னிடம் சரணாகதி செய்தோரிடம் வசப்படுபவன் எம்பெருமான்.

**அன்பனாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம்** செம்பொன் ஆகத்து அவுணன் உடல் கீண்டவன் (திருவாய்மொழி 9-10-6)

**13. தண்டதரத்வம் - அபராதத்திற்கேற்ப சிக்ஷிப்பவன் கர்மா ஸாக்ஷித்வம் - கர்மாக்களுக்கு ஸாக்ஷியாக இருப்பவன்**

ஆச்ரிதர்களின் கர்மாக்களுக்கேற்ப பலனளிப்பவன் (தண்டிப்பவன்) எம்பெருமான்.

அதிரும் கழல் பொரு தோள் இரணியன் ஆகம் பிளந்து அரியாய் **உதிரம் அளைந்த கையோடிருந்தானை** (பெரியாழ்வார் திருமொழி 4-1-1)

மான் முனிந்து ஒரு **கால் வரிசிலை வளைத்த மன்னவன்** பொன்னிறத்து உரவோன் **ஊன் முனிந்து அவனது உடல் இருபிளவா உகிர் நுதிமடுத்து** (பெரிய திருமொழி 1-4-8)

உளைய ஒண்திறல் பொன்பெயரோன் தனது **உரம் பிளந்து உதிரத்தை அளையும் வெஞ்சினத்து அரிபரி கீறிய அப்பன்** (பெரிய திருமொழி 4-2-7)

உரம் பற்றி இரணியனை உகிர்நுதியால் ஒள்ளிய மார்புறைக்க ஊன்றி சிரம் பற்றி முடியிடியக் கண் பிதுங்க வாயலரத் தெழித்தான் (பெரியாழ்வார் திருமொழி 4-9-8)

**14. ஆச்ரிதார்த்த குணபரீவாஹாவதாரத்வம் - வாத்ஸல்யாதி குணங்களின் பொருட்டு அவதரிப்பவன்**

தன்னை ஆச்ரயணீயனாய்க் கொண்டவர்கள் மீது உண்டான வாத்ஸல்யாதி குணங்களினால் அவதாரம் கொள்பவன் எம்பெருமான். தனது பக்தர்களாம் ப்ரஹ்மன் மற்றும் ப்ரஹ்லாதனின் வாக்கு பொய்க்காமலிருக்க ந்ருஸிம்ஹனாக அவதரித்தான்.

நின்றும் இருந்தும் கிடந்தும் திரிதந்தும் ஒன்றுமோ ஆற்றான் என் நெஞ்சகலான் அன்று அங்கை வன்புடையால் பொன்பெயரோ வாய் தகர்த்து மார்விடந்தான் **அன்புடையன் அன்றே அவன்** (பெரிய திருவந்தாதி - 35)

பரிய இரணியது ஆகம் அணியுகிரால் அரி உருவாய் கீண்டான் **அருள் தந்தவா நமக்கு** (பெரிய திருமொழி 9-4-4)

**15. அவித்யாதி ஹேதுத்வம் - அவித்யையை உண்டாக்குபவன்**

அநாச்ரிதர்களுக்கு பரதேவதை யார் எனும் ஸத்ய ஜ்ஞானத்தினை அருளாது கர்மத்தளையில் சிக்கச் செய்து தண்டிப்பான்.

வரத்தால் வலி நினைந்து **மாதவ நின் பாதம் சிரத்தால் வணங்கானாம்** என்றே உரத்தினால் ஈரரியாய் நேர் வலியோனாய இரணியனை ஓரரியாய் நீ இடந்தது ஊன் (முதல் திருவந்தாதி - 90)

வரங்கருதித் **தன்னை வணங்காத வன்மை** உரம் கருதி மூர்க்கத்தவனை நரம் கலந்த சிங்கமாய் கீண்ட திருவன் அடியிணை (பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 84)

வென்றிகொள் வாளவுணன் பகராதவன் **ஆயிர நாமம் அடிப் பணியாதவனைப்** பணியால் அமரில் நிகராயவன் நெஞ்சிடந்தான் (பெரிய திருமொழி 2-4-7)

**16. ஆச்ரிதாவித்யா நிவர்த்தகத்வம் - அவித்யையைப் போக்குபவன்**

ஆச்ரிதர்கட்கு கர்மானுகுணமாக உண்டாகும் அவித்யையினைப் போக்கி ஸத்ய ஜ்ஞானத்தினை அநுக்ரஹிப்பான்

புகுந்து இலங்கும் அந்திப் பொழுதத்து அரியாய் இகழ்ந்த இரணியனது ஆகம் சுகிர்ந்தெங்கும் சிந்தப் பிளந்த **திருமால் திருவடியே வந்தித்து என் நெஞ்சமே வாழ்த்து** (மூன்றாம் திருவந்தாதி - 95)

**17. ஸர்வ வ்யாபகத்வம் - அனைத்திலும் நிறைந்திருப்பவன்**

**18. நிரதிசய ஸூக்ஷ்மத்வம் - அனைத்து வஸ்துக்களிலும் ஸூக்ஷ்மமாக இருப்பவன்**

தூணிலும் துரும்பிலும் நிறைந்திருப்பான் ந்ருஸிம்ஹன் என்பதைக் கம்பன் அநுபவிக்கும் பாங்கு பேரழகு

**சாணிலும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்; இந் நின்ற தூணினும் உளன்;** நீ சொன்ன சொல்லினும் உளன்; இத் தன்மை காணுதி விரைவின் என்றான்

(கம்ப ராமாயணம் - இரணியன் வதைப் படலம் -124)

**பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது, சீயம்; பின்னை வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும் அளந்தது; அப் புறத்துச் செய்கை யார் அறிந்து அறைகிற்பார்? கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும்** (கம்ப ராமாயணம் - இரணியன் வதைப் படலம் -130)

நம் ஸுக்ருதம் பலனளிக்கும்படி எம்பெருமான் ஸங்கல்பித்ததனால் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்தருளின (அஷ்டாக்ஷரத்தில் புதைந்துள்ள) அந்தப் பரமனது திருக்கல்யாண குணங்களில் அந்வயிக்கும் பாக்யம் பெற்றோம். ப்ரதமாசார்யன் திருவடிகளே சரணம்.

## தேசிக மொழி

கபடமான
சிங்க உருக்கொண்டவனே!
திருமுகமண்டலம் பிடரி
மயிர்க்கற்றைகளால் பயங்கரமாய்
வேகத்துடன் கூடிய பெருஞ் சிரிப்பால்
மிடுக்குடையதாய், புருவங்கள் துடிக்கப்
பெற்றதாய், கோபம் மூண்டதாய் (உன்னால்)
செய்யப்பட்ட போதிலும், உன் கருணை
தாமரை போன்ற திருக்கண்ணால்
அசுரச் சிறுவனாகிய ப்ரஹ்லாதனுக்கு
முலைப்பாலூட்டி மாறுபடச் சிகிச்சை
செய்து வெளிப்படுகின்றது.

- ஸ்ரீ காமாஸிகா அஷ்டகம்

ஶ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (38)

## Aahaara Niyamam — A Summary Of 'Takes' And 'Leaves' by Swami Desika

**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

It is well-known that Swami Desika lived as an embodiment of knowledge, austerity and orthodoxy (ஜ்ஞாநம், வைராக்யம், அநுஷ்டாநம்). He was a Sarva-thanthra Swathanthra, meaning, a Master of All Arts. His works number over 120 in three languages, besides Mani Pravaalam (mixture of Sanskrit and Tamil).

An incarnation of the Lord, he has fittingly shown profuse mercy on his followers like us and given us these scriptures to enable us to understand the Visishtaadhvaitha philosophy properly and live a life of a true Vaishnava. However, due to ever-increasing level of limitations we are unable, in varying degrees, to fulfil the vision with which many of his works were written.

The Acharya's Aahaara Niyamam, which we shall take up in this Note, is a classic case. This Tamil Prabandham is an Anushtaana Grantham and not an Anusandhaana Grantham (a work the contents of which are meant to be followed and not the one for recitation). Swami Desika has enumerated a number of DO's and DON'T's as regards eatables and food habits in general. Some of them may seem to be impracticable, only because the lifestyles of most of us have deviated quite far (in varying degrees, again) from what has been prescribed in the scriptures.

The Saasthras have primarily taken into account the nature of things — which of the three qualities (Sathva, Rajas and Thamas) they will impart in people — in determining their suitability or otherwise for eating. Aahaara Niyamam truly reflects the prescriptions of the scriptures.

Notwithstanding our capability or otherwise in observing what has been stated in the work, we must at least know what are right and what are not. Important points found in this Prabandham are listed below under relevant headings.

One cannot miss the fact that even in a work of this nature, Swami Desika does not forget to remember the Lord. In four such instances, he recalls Varadaraja (Paasuram No. 5 & 21), Venkatesa (8) and Ranganatha (10).

Here we go...



**Not fit to be eaten**

- Food that came through the backdoor or other improper entrances.
- Things made of grains like millet (வரகு).
- Food that fell from the mouth and things on which it fell.
- Food that was seen or touched by wicket people or dog.
- Over-seared food; that touched by cloth, saliva or sneeze.
- Food on days like Ekadasi and other Vratham/ Upavaasam day.
- Food smelled by people or animals.
- Food touched by disease-stricken persons.
- Food in which fly, worm, thread, hair or nail is found.
- Vegetables or grains taken from others' land without permission.
- Food that is excessively bitter, salty, pungent or sour.
- Food that was not offered to the Lord or Bhagavathas.
- Food made using money earned through means prohibited in the Saasthras.

- Food made by ineligible children (not having had Samasrayanam from an Acharya and lacking in orthodoxy).
- Food meant and earmarked for and offered to Devathas like Siva.
- Food that is unbearably hot.
- Unseasonal vegetables; also, unseasonal flowers should not be used.
- Food items subjected to extraction, except buttermilk.
- Wood apple and Pori, in daytime.
- Sesame, during night.
- Food that has gingili or curd, during night.
- Food mixed (பிசைந்தது) by others.
- Ghee put after having started eating.
- Food cooked twice or stale food.
- Food served with iron vessel or hand (uncooked/raw things may be served with hand).
- Food prepared in others' places.
- Fluids oozing from trees, other than asafoetida (பெருங்காயம்).

Anything that is not good or tasty, even if fresh.

It may be noted that in Paasuram Nos. 4 and 5 various vegetables and spinach that are forbidden have been listed. The author also deals with certain kinds of milk that are not to be drunk (Paasuram No. 17), water that is not to be used (Paasuram No. 18) and things to be avoided when taking betal leaf (Paasuram No. 19).

Apart from these, Swami Desika says that, all that is forbidden by austere and orthodox elders have to be avoided.

**Circumstances and manner in which one should not eat**

- Without completing the daily morning rituals (bath, Sandhyavandhanam, Japam, Thiruvaaraadhanam, etc.
- Alone, that is, aside from the Ghoshti (without Bhagavathas).
- At the time of sun-set or midnight.
- Without lamp/light.
- With flame or moon instead of lamp for light.
- Husband and wife simultaneously.
- Using the left hand.

**Fit to be eaten**

- Remainder of the food eaten by one's father, Acharya or the eldest brother.
- Remainder of the food eaten by one's husband.
- Anything that is forbidden generally (as stated earlier) can be eaten, that is, only at the time of emergency (that is, when there is threat to life).
- Eight things - water, roots, ghee, milk, Havis from Yaga, Nimanthranam (eating at the time of Sraadhdham), preaching of the Guru (or eating with his permission) and medicine - will not spoil the Vratham even on days like Ekadasi, if it is unavoidable.
- Baked or roasted items (not involving water), naturally-ripened fruits, Maavadaam, Appam, Cheedai, Roti — all these, even if they become old (if they are good and tasty).
- Variations of milk, like Thirattup-paal, Bhakshanams like Then Kuzhal, Murukku, etc.; things made of flour, jaggery and wheat; medicines prescribed by doctors - all this, even if they become old.
- Overnight-rice (பழையது) put in pure water, allied dishes (வ்யஞ்ஜநம்), buttermilk, ghee, milk, curd, vegetables, leaves — all this can be used even if they become old.

**Miscellaneous points**

- Only Amavasya and Pournami are the apt days for Samudhra Snaanam.
- During the time of Grahanam, all waters acquire the sanctity of the Ganga water.
- The flow and speed of a river purifies the water even if dead bodies of horses and donkeys float in it.

In the end, the illustrious author says that differences in sects, stages of life, gender, place, etc., could warrant minor adjustments in observance of rules and that these could be learned from elderly scholars.

As the illustrious Acharya's annual Thirunakshathram (falling on 26th September) approaches, let us strive to adhere to his preachings as much as possible.

***(to be continued…)***

# Swami Desika – Master of Analogy (2)

## 100 Gems from Srimath Rahasya-thraya Saaram

**Smt. Padmalatha Sridharan, Chennai**

**Analogical Gems 6 to 10**

**6. How the sailor needs to know only the route he has to take and not the entire length and breadth of the sea (Thathva-thraya Chinthana Adhikaaram):**

"அபரிச்சேத்யமான கடலிலே படகோட்டுவார் வழிமுதலாக வேண்டுவன தெளியுமாப் போலே"

In this chapter Swami Desika has enunciated the three Realities — Chethana, Achethana and Iswara (the sentient, non-sentient and the super-sentient) and described the essence of all the three. While explaining the Iswara thathvam, Sri Swami expounds that it is only Sriman Narayana who is the Supreme Reality and sets out to describe his nature, various attributes, form, wealth, exploits, etc.

Swami then establishes that Goddess Sri and Narayana together make up the single Reality of Iswara and the Divine Couple have divided between themselves the divine actions such as recommendation for salvation (Purushakaaram) and punishment. Swami Desika avers that Sri and Narayana do not form two Realities but a single Supreme Reality. This is corroborated by all the Saasthras and the works of our preceptors. So it is needless to question the veracity of the same. Citing illustrations, he opines that in such extremely profound matters, it is better to know only what we need to for the purpose of deliverance rather than confounding ourselves with matters which are beyond our scope.

So, just as the sailor who ventures into the sea need not and cannot know fully the immeasurable water body, just learns about a safe route to reach the shore across, we need to accept unquestioningly the philosophy as professed by our preceptors.

**7. How a person who is fortunate enough to obtain food products without personally cultivating them need not worry about cultivation (Thathva-thraya Chinthana Adhikaaram):**

"க்ருஷி பண்ணாதே உண்ண விரகுடையவன் க்ருஷி சிந்தையை விடுமாப் போலே"

Sri Swami herein states a fact which is heartily felt by all of us. it is extremely difficult to master the various philosophical works which are immensely complex and tend to confuse the intellect. So, one must approach an ideal preceptor and learn and clearly understand only those concepts relating to the means to reach the Lord Supreme's abode and refrain from striving to acquire knowledge in various other Saasthras.

One who can buy the stuff from the cultivator/ merchant, would not worry about the weather, availability of seeds for cultivation, etc. Similarly, our preceptors have already cultivated the rich land of our philosophy and the produce is available to us in a ready-to-use form and so we need not waste our time in knowing about unimportant things but concentrate on learning the essence of the Saasthras, namely, the proper means to attain the Lord.

**8. How a person gets relieved of his sins after a dip in the river Ganga even if his intention was to assuage his thirst (Paradhevatha Paaramaarthya Adhikaaram):**

"விடாய்தீரக் கங்காஸ்நாநம் பண்ணப் பாபம் போமாப் போலே"

This is a particularly relevant analogy to most of us who cannot help but desire for material things. Even if we desire material things we should pray to Sriman Narayana for them and not other deities. Why?

People worship various deities for getting various things like wealth, fame, good health, etc. and it may seem that these wishes are getting fulfilled immediately but it is Sriman Narayana who is the actual source as he is the Immortal Soul (Antharyaami) residing in the bodies of these deities. Further, these smaller Gods or Pretenders cannot give Moksha. But if one approaches Sriman Narayana without resorting to others like Siva or Brahma, he would be granted material wealth also and gradually made to embark upon the path of spiritual pursuit as the wealth granted by the Lord Himself is good-natured (Saathvik). This is because of the absolute mercy of the Lord who is pleased that the person came to Him even if it was only to get a petty wish



fulfilled.

Just as the person who becomes pure after a dip in the Ganga irrespective of the fact that he fell into it unintentionally or he simply wanted to assuage his thirst, we get cured of our trivial desires and progressively opt for higher goals even while enjoying the material benefits bestowed on us by the Lord.

**9. How the child princes of a smaller kingdom just have to repeat their nanny's words to get succour from the sovereign (Adhikaari Vibhaaga Adhikaaram):**

"தாதிமார் சொன்ன பாசுரத்தைச் சொல்லி
ஸார்வபௌமனை சரண்புகும் முக்தரான
ஸாமந்தகுமாரர்களைப் போலே"

Saranaagathi is mainly performed by two methods, namely, Ukthi Nishtai (repeating the manthras after the preceptor in front of the Archaavathara (Divine form of the Lord) and Acharya Nishtai (being included in the preceptor's Saranaagathi).

There are five pre-requisite qualities (Pancha Angas) for performing Saranaagathi which are:

Aanukoolya Sankalpam — Pledging to do only those acts prescribed in the Saasthras as pleasing to the Lord;

Praathikoolya Varjanam — Averring to refrain from doing things which are forbidden in the Saasthras;

Maha Visvaasam — Unswerving belief that Sriman Narayana is the sole protector;

Gopthruthva Varanam — Explicit request to the Lord to accede Moksha; and

Kaarpanyam — Realisation of our haplessness, that is, that we are incapable of carrying out the difficult means (Bhakti Yoga) to attain Moksha.

Even a person who is not fully cognisant of these five components, can still perform Saranaagathi if he has the aptitude for it and clear understanding that only Sriman Narayana can protect him from being earth-bound again.

Just as the child princes of the conquered kingdom would repeat their nanny's words without fully understanding them to get succour from the conqueror, the disciple has to just repeat the utterances of the preceptor and surrender himself to the Lord, but with complete faith in salvation.

**10. How a youngster gets alms from a wealthy well-wisher on uttering the words 'Bhavathi Bhikshaam Dehi' even if he is unaware of the etymology of the words (Adhikaari Vibhaaga Adhikaaram):**


"பதவாக்யாதிவ்ருத்தாந்தம் அறியாத பாலன் ஒருகால்
'பவதி பிக்ஷாம் தேஹி' என்றால் ஆட்யரான ஸத்துக்கள்
அகத்திலே அப்போதே அபேக்ஷிதஸித்தி உண்டாமாப்
போலே"

This is another analogy pertaining to Ukthi Nishtai which establishes its fruition firmly. One might wonder as to how words repeated blindly could convey the speaker's intention and beget a response but it is clearly proven even in everyday occurrences that a person need not be an expert in the construction of sentences to make himself understood.

A young man of poor means, if he finds himself in a wealthy well-wishers' house and utters the words "Bhavathi Bikshaam Dehi" without knowing about their order, structure, construction, etc. would still get alms immediately because the person(s) to whom the words are spoken know(s) their meaning perfectly well. Sriman Narayana is waiting for us to surrender unto him. So, He is gratified by our Ukthi (utterance) even if we do not know its grammatical import and grants us the eternal kingdom of Sri Vaikuntam.

Since the nature of Lord's mercy is all-encompassing, there is no doubt about the redemption of even ignorant people like us through Ukthi Nishtai.

***(to be continued…)***



# *With Pranams:*

**Sridhar Parthasarathy & Family,**
Luz Church Road,
Mylapore,
Chennai - 600 004.

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family,**
for sponsoring this month's issue of Desika Sandesam




**திரு அவதார உத்ஸவம்**










திரு அவதார உத்ஸவம்





